B.V.B.
CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ओम्

संस्कृतभाषाशब्दसमुद्रः

[द्राविडभाषार्थसहितः]

தமிழிற்பொருளுடன்

வடமொழிச்சொற்கடல்

115

ब्रह्मश्री
पापनाशशिवनामार्येण
नूतनरीत्यासंग्रथितोयं

ப்ரஹ்மஸ்ரீ
பாபநாசம் சிவன் அவர்களால்
புதுமுறையில் தொகுக்கப்பெற்றது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ओम्

संस्कृतभाषाशब्दसमुद्रः

[द्राविडभाषार्थसहितः]

தமிழிற்பொருளுடன்

வடமொழிச்சொற்கடல்

Bharatiya Vidya Bhavan Library
Acc. No.
Date
Received
Bharatiya Vidya Bhawan's ... acharya Sanskrit Mahavidyalaya
704

ब्रह्मश्री

पापनाशशिवनामार्येण

नूतनरीत्यासंग्रथितोयं

ப்ரஹ்மஸ்ரீ

பாபநாசம் சிவன் அவர்களால்

புதுமுறையில் தொகுக்கப்பெற்றது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

असंयुक्ताक्षरपदगर्भः

प्रथमो भागः

प्रथमस्तरङ्गः

முதல்தரங்கம்

Bharatiya Vidya Bhawan's Shankaracharya Sanskrit Mahavidyalaya
704

விலை ரூ. 1—8—0

THE HOMOEOPATHY PRESS, KUMBAKONAM

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

निवेदनं
நூன்முகம்

"பிரயோஜனமனுத்திச்ய நமந்தோபிப்ரவர்த்ததே" என்றொரு ஸம்ஸ்க்ருதப் பழமொழியுண்டு. 'பயன் கருதாது அறிவிலியும் ஓர் வினை புரிய முற்படான்' என்பது இதன் பொருள். நான் ஏழெட்டு வர்ஷங்களாய் உங்கள் முன் ஸமர்ப்பிக்கும் இவ் வடமொழிச் சொற்கடல் ஸம்பந்தமாய் எதற்காக மூளையைக் குழப்பி மண்டையை உடைத்துக் கொண்டேனென்று பல முறை சிந்தித்து நானே உள்ளுக்குள் நகைத்துக்கொண்டதுண்டு. ஆயினும் நின்றுவிடாமல் ஒரு கரையையும் அடைந்து, இதைப் புத்தக வடிவமாய்க் காணக் கருதிய என் கனவு நன்வானதில் மனம் மட்டற்ற மகிழ்ச்சியுற்றது. இதில் எத்தனையோ குறைபாடுகளும் பிழைகளுமிருக்கலாம். கடலல்லவா? முயற்சியை மட்டும் மெச்சிப் பெரியோர் அங்கீகரிப்பரென்றும், வடமொழி பயில்வோர்க்கும ஏனையோர்க்கும் சிறிய அகல்தீப அளவிலாவது நெறி விளக்கக் கூடுமென்று கருதியும் வெளியிடலானேன். குற்றமிருந்தால் எனக்கெடுத்துரைக்க வேண்டுமென்றும் விக்ஞாபனஞ்செய்துகொள்ளுகிறேன்.

தொண்டன்,

P. R. SIVAN

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

இதில் காணும் ஸம்க்ஞைகளுக்கு விளக்கம்

I குற்றெழுத்து ह्रस्वं

U நெட்டெழுத்து दीर्घं

ـ அரைமாத்ரை अर्धमात्रा

:, விஸர்கம்; ـ, அனுஸ்வாரம்; தனிமெய்யெழுத்து क्, त முதலியன அரை மாத்திரைகளாகும்.

- (अ) अव्यय पदं ஆண், பெண், அலி மூன்றிலும் சேராத சொல். அவ்யயம்.

राजा - न ராஜன் என்ற நகரம் முடிந்த சொல்; ஸீதா, ராதா முதலியவற்றைப்போல் ஆகாராந்தச் சொல்லல்ல.

माता - ऋ மாத்ரு சப்தம் ऋ எழுத்தில் முடிவது

पिता - " இதுவுமதுபோல் குறிக்கும் என்று உணர வேண்டும்.

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

प्रथमस्तरङ्गः

முதல் தரங்கம்

(1) I

अ - அக்ஷரங்களுள் மங்களகரமான முதலெழுத்து
अ+उ+म्=ओम् என்ற பிரணவத்தின் முதலெழுத்து; இல்லாமை, எதிர்மறை

उ - ஐயக்குறி, ஐயவினை

कु - இழிவு, கொஞ்சம்

च - உம்.

तु - பிரித்தல்

न - இல்லை, இன்மை.

नि - இன்மை, மிகவும்.

नु - ஐய வினை.

व - போல

वि - வெறுப்பு, விரோதம், விசேஷம், வெளிப்படல்.

सु - நன்மை, நன்றாக.

ह - வியப்பு, துயரம்.

हि - அல்லவா?

இச்சொற்கள் யாவும் (अ) अव्ययं அவ்யயம் என்னப்படும்.

—o—

(2) U

आ - (अ) வியப்பு, துயரம், நினைத்தல்.

ओ - ,, விளி.

का - म (मकारान्तः) எவள்?

जा - பிறந்தவள்.

ना - ऋ மனிதன்

नो - (अ) இல்லை.

भा - ஒளி.

भो - (अ) விளி

मा - ” தகாது.

मा - லக்ஷ்மி

मे - (अ) ஆட்டின் குரல

मे - द எனக்கு, என்னுடைய.

या - ,, யாதொருவள்

रे - (अ) விளி

वा - ” அல்லது

वै - ” உறுதி

सा - द அவள்

हा - (अ) ஐயோ!

ही - ” ஆச்சரியம்.

हे, है - ” விளி.

—o—

(3) 1

ऋक् - च ருக்வேதம், மந்த்ரம்.

दिक् - श திசை, கதி.

दृक् - ,, கண்

धिक् - (अ) சீயென்னல்

धुक् - ह கறப்பவன்

नक् - श நசிப்பவன்

भुक् - ज உண்பவன்

मुक् - च விடுபவன்

युक् - ज சேர்ப்பவன்

रुक् - ” நோய்

शुक् - च துயர்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

स्रक् - न அவி சொரியும் பாத்திரம், விடுபவன்
युङ् - ज சேர்ப்பவன்
अच् - (अ) உயிரெழுத்து
तट् - ष தச்சன்
तृट् - " தாஹம்
नट् - श நசிப்பது
निट् - " இரவு
भृट् - न ஒட்டிக்கொள்வது.
मुट् - ष திருடன்
रुट् - " சினம்
सृट् - ह முளைப்பது
लिट् - " தழுவுவது, பூசுபவன்
विट् - श விட்டை, வைச்யன்
षट् - ष ஆறு என்ற எண்
सृट् - न படைப்பவன்
उत् - (अ) உயர, மேலே
कृत् - வேலை, வேலைசெய்பவன்
चित् - உயிருள்ளது, அறிவுள்ளது, ஞானஸ்வரூபம்.
छित् - द வெட்டுபவன்
जित् - ஜயிப்பவன்
तत् - द அது
दत् - பல்
धृत् - சுமப்பவன்
पत् - द கால்
पुत् - " ஓர் நரகம்
भित् - द பிளப்பு, பிளப்பவன்
बुत् - ध அறிவாளி
भृत् - त தாங்குபவன்
मत् - थ கடைபவன்
मुत् - द மகிழ்ச்சி, முக்தி
मृत् - " மண்

यत् - द யாதொரு
युत् - ध போர், போர்செய்பவன்
युत् - (अ) அல்பம், நிந்தை
वत् - " போல
वित् - द அறிஞன்
सत् - त உள்ளது, நல்லது, ஈச்வர ஸ்வரூபம்
हृत् - द மனம்
खन् - வெட்டும் கருவி, வெட்டு
सन् - त ஸாது, நல்லவன்
सन् - (अ) இருந்துகொண்டு
गुप् - காப்பவன்
अम् - ஜலம்
उं -(अ) அங்கிகரித்தல், கேட்டல்
कं - நீர், தலை, இன்பம், நிந்தை
किम् - எது? என்ன?
किम् - (अ) ஐயம்
रवम् - வானம், புலன், ஊர், க்ஷேத்ரம், சூன்யம், பிந்து, ஸுகம், ஸ்வர்கம்
झं - (अ) காற்றொலி, வண்டினொலி
टं - " வில்லின் நாணொலி
भं - நக்ஷத்ரம்
शं - க்ஷேமம், ஸுகம்
सं - (अ) நன்றாக
हुम् - " அச்சுறுத்தல்
दुर्, दुस् - " கேடு, கெட்டது
निर्, निस् - " விலகல், கெட்டது
हल् - " மெய்யெழுத்து
अः - பிரமன், விஷ்ணு, சிவன்
इः - இந்த்ரன், சிவன், ஸூர்யன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

उः - சிவன், விஷ்ணு

कः - பிரமன்

कः - म எவன்? யார்?

कुः - பூமி

गिः - விழுங்குதல்

जः - பிறவி

यः - द யாதொருவன்

विः - பறவை

सः - द அவன்

---o---

(4) U ∸

गोक् - பசுவுள்ளவன், இடையன், காப்பவன்

भाक् - ज அடைபவன்

वाक् - च சொல், கலைமகள்

पाट् - (अ) விளி

राट् - ज அரசன்

रेट्, रोट् - ष ஹிம்ஸிப்பவன்

चेत् - (अ) ஆனல்

पात् - द கால்

भान् - त பிரகாசிப்பவன்

आम् - (अ) ஸம்மதி

ऊम् - " கேள்வி

ओम् - " ப்ரணவம், ஒத்துக் கொள்ளுதல், ப்ரஹ்மம்

आः - ,, வியப்பு, வேதனை

ऊः - பெருக்கம்

गीः - र् சொல்

गौः - ओ பூமி, பசு, காளை, ஆதவன், கதிர், ஓர் யாகம், திசை, வாணி, சொல், வான், வஜ்ரம், நீர், கண், அம்பு, வால், சந்த்ரன், புத்தி

जूः - र् ஜ்வரம், வானம், வாணி, பிசாசு, வாயு, வேகசாலி

तूः - र् வேகம்

दोः - स புஜம்

धीः - புத்தி

धूः - र சுமை

नीः - நாயகன், கொண்டு செல்பவன்

नौः - ஓடம்

पाः - ரக்ஷிப்பவன், குடிப்பவன்

पूः - र ஊர்

भाः - स ஒளி, கிரணம்.

भीः - அச்சம்

भूः - பூமி, விளைவிடம், உண்டானது

भोः - (अ) விளி

माः - " தடுத்தல்

मूः - र மூர்ச்சை

मूः - व् ,,

राः - ऐ ஐச்வர்யம், அக்னி, முகில், பொன், கூரானது

वाः - र ஜலம்

---o---

(5) II

लिगु - சித்தம்

रघु, लघु - அல்பம், சிறிது, கார்கில், அழகானது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

कटु - கொடுமையானது, கடுப்பது, கைப்பு, நஞ்சு, பகை, தீச்செயல், வசைமொழி.
चटु - இனிமையானது, அழகானது
पटु - ஸமர்த்தமானது
उडु - நக்ஷத்ரம்
अणु - நுண்ணியது
उत - (अ) அல்லது
बत - ,, கஷ்டம்
अति - ,, அதிகம்
इति - ,, என்று
कति - ,, எத்தனை?
जतु - அரக்கு
अथ - (अ) பிறகு
पृथु - பெரிது
यदि - (अ) ஆனல், ஒரு வேளை
मृदु - மெல்லியது
अधि - (अ) மிகை, மீது,
दधि - தயிர்
मधु - தேன், கள், பால், நீர் அம்ருதம்
अनु - (अ) உடன், கூட
तनु - கொஞ்சம், சிறிது, இளைத்தது
ननु - (अ) அல்லவா?
अप - " கெடுதல், நீங்குதல்
उप - " உதவி, ஸமீபம்
अपि - " கேழ்வி, உம்
अभि - " எதிரே, நாற்புறமும்
विभु - எங்கும் நிறைந்தது
किमु - (अ) ஐயவினு

अयि - (अ) தன் கீழானவனை விளித்தல், அடி!
परि - " நாற்புறமும்
उरु - பெரிது
गुरु - கனமானது, விரைவது, பெரிது
पुरु - அதிகம்
किल, खलु - (अ) அல்லவா?
अव - " அகலல்
इव - " போல
नव - न ஒன்பது
दश - " பத்து
पशु -(अ) காண்பது
विषु - " பல
वसु - தனம், ரத்னம், நீர், இன்சுவை
इह - (अ) இங்கே
सह - ,, கூட, உடன்
नहि - ,, இல்லை, இல்லையல்லவா?
बहु - மிக்வும், அதிகம், பல

—o—

(6) II–

वणिक् - ज வியாபாரி, வைச்யன்.
पृथक् - अ தனியாக, வேறுக
उदक् - च வடக்கு
विदिक् - श இருதிசைககளின் நடு, திக்கற்றவன்
अदृक् - श குருடன்
सदृक् - " ஸமானமானவன்
सुदृक् - " நல்ல கண்ணன், குளிர்ந்த பார்வையுடையவன்
ऋधक् - (अ) அடிக்கடி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

अरुक् - ज நோயற்றவன்
हिरुक् - (अ) கடைபவனுக, அருகில், இடையில்
अशुक् - துக்கமற்றவன், கடவுள்
भिषक् - ज வைத்யன்
असृक् - ,, ரக்தம்
लघट् - அக்னி, வாயு
मदट् - முழங்குவது
सरट् - முகில், தேனீ, வாயு
वषट् - (अ) ஹவிஸ்ஸு அளித்தல்
यकृत् - கட்டி
शकृत् - மலம்
सकृत् -(अ) ஒரு முறை
सुकृत् - புண்யசாலி
जगत् - உலகம், பிரபஞ்சம், ஜங்கமம், வாயு
पचत् - சமயல்
तटित्, तडित् - மின்னல்
पतत् - வீழ்வது
तुदत् - ஹிம்ஸிப்பவன்
ददत् - கொடுப்பவன்
नदत् - சப்திப்பது
रुदत् - அழுவது
दहत् - அஞ்சுபவன்
सनत् - [अ] சாச்வதம்
तृपत् - குடை
विपत् - அபாயம்
समित् - யுத்தம், அரசு முதலியவற்றின் சுள்ளி
कुमुत् - வெள்ளை அல்லி, லோபி.
इयत् - இவ்வளவு
कियत् - எத்தனை?

वियत् - வானம்
जरत् - கிழம்
दरत् - பானசாலை, அருவி, பயம், மலை
शरत् - சரத்ருது, ஆண்டு
सरित् - நதி
हरित् - திசை, மஞ்சள்நிறம், ஓர் புல்
गरुत् - சிறகு
परुत् - [अ] முன் வர்ஷம்
मरुत् - வாயு, அஷ்ட மருத்துக்கள், தேவன், தன்றிலெண்ணை
चलत् - அசைவது
भवत् - ஸம்பவித்தது
कुवित् - [अ] மிகவும்
दृषत् - கல், குன்று, பட்டம், காற்றாடி, பிசைதல்
असत् - இல்லாதது, கெட்டது
भसत् - சோபிப்பது
मसत् - யோனி
लसत् - ப்ரகாசிப்பது
जहत् - விட்டது, த்யாகஞ் செய்தல்
बृहत्, महत् - பெரிது
सुहृत् - நல்ல ஹ்ருதயங் கொண்டவன், நண்பன்
लिखन् - त எழுதுபவன்
पचन् - ,, சமையல்காரன்
भजन् - ,, பஜிப்பவன்
यजन् - ,, யாகம் செய்பவன்
अटन् - ,, அலைபவன்
नटन् - ,, நடிப்பவன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

रटन् - त கத்துபவன், புலம்புபவன்
पठन् - „ படிப்பவன்
लुठन् - „ உழல்பவன்
भणन् - „ பேசுபவன்
रणन् - „ கதறுபவன்
पतन् - „ வீழ்பவன்
यतन् - „ முயற்சிப்பவன்
अदन् - „ உண்பவன்
गदन् - „ பேசுபவன்
तुदन् - „ ஹிம்ஸிப்பவன்
नदन् - „ கத்துபவன்
नुदन् - „ ஏவுபவன்
रदन् - „ சத்திப்பவன்
रुदन् - „ அழுபவன்
वदन् - „ சொல்பவன்
जपन् - „ ஜபிப்பவன், புலம்புபவன்
तपन् - „ பிரகாசிப்பவன்
लपन् - „ பேசுபவன், புலம்புபவன்
लिपन् - „ பூசுபவன், எழுதுபவன்
शपन् - „ சபிப்பவன், ஆணையிடுபவன்
लभन् - „ அடைபவன்
नमन् - „ வணங்குபவன்
रमन् - „ ரமிப்பவன், விளையாடுபவன்
वमन् - „ வாந்தி செய்பவன்
अयन् - „ செல்பவன்
नयन् - „ கொண்டு செல்பவன்
किरन् - „ இறைப்பவன்
गिरन् - „ விழுங்குபவன்

चरन् - त ஸஞ்சரிப்பவன்
तरन् - „ கடப்பவன், தாண்டுபவன்
सरन् - „ ஊர்பவன்
हरन् - „ பறிப்பவன்
चलन् - „ அசைபவன்
दलन् - „ பிளப்பவன்
मिलन् - „ சேர்பவன்
वलन् - „ சுற்றுபவன், உழல்பவன்
अवन् - „ ரக்ஷிப்பவன்
भवन् - „ ஜனிப்பவன்
दिशन् - „ கொடுப்பவன்
मृशन् - „ தொடுபவன்
विशन् - „ அமர்ந்திருப்பவன், செல்பவன்
लसन् - „ சோபிப்பவன்
वसन् - „ வஸிப்பவன்
हसन् - „ சிரிப்பவன்
दहन् - „ எரிப்பவன்
वहन् - „ சுமப்பவன், தாங்குபவன்
ककुप् - भ திசை, ஆறு, அழகு, சம்பகமரம்
अकं - துன்பம்
शुकं - [अ] சீக்கிரம், மிகவும்
नखं - ஓர் வாஸனைச் செடி
मुखं - வாய், வாயில், முகம்
सुखं - இன்பம்
नगं - அசையாதது
भगं - மோக்ஷம், ஞானம், ஐச்வரியம், புகழ்
युगं - இரண்டு, யுகம், ஓர் மருந்து

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

सुगं - நடப்பதற்கெளிது
अघं - பாபம், துயரம்
अजं - பிறவாதது
निजं - உண்மை, தனது, சாச்வதம்
तटं - கரை
पुटं - பக்கம்
मठं - ஸன்யாஸிகள் பரதேசிகள் தங்குமிடம்
बिडं - அடுப்பு
दृढं - கெட்டி, உறுதி
दृढं - [अ] மிகவும்
ऋणं - கடன்
किणं - புண், காயம்
तृणं - புல், துரும்பு, அல்பம்
उतं - நெய்யப்பட்டது
ऋतं உண்மை, பொறுக்கும் தான்யம்
कृतं - செய்யப்பட்டது, க்ருதயுகம், ஹிம்ஸிக்கப்பட்டது, போதுமானது
गतं - போனது, மாய்ந்தது
घृतं - நெய், ஜலம்
छितं வெட்டப்பட்டது
जितं - ஜயிக்கப்பட்டது
ततं - பரந்தது, நிறைந்தது, வீணை முதலிய வாத்யம்
धुतं - அசைந்தது, சுத்தம் செய்யப்பட்டது
धृतं - சுமக்கப்பட்டது
नतं - வணங்கினது, வக்ரமானது
नुतं - துதிக்கப்பட்டது
भृतं - தாங்கப்பட்டது
मतं - கருதப்பட்டது, அபிப்ராயம், மதம்
मितं - நியாயமானது, அளக்கப்பட்டது
मृतं - இறந்தது
यतं - கட்டுப்பட்டது
युतं - சேர்ந்தது
रतं - ஆசை, மைதுனம்
रुतं - பறவை நாதம், ஓசை
वृतं - வரிக்கப்பட்டது, சூழப்பட்டது
शतं - நூறு, வெகுநாள், சாச்வதம்
शितं - தீட்டப்பட்டது
श्रृतं - பால்
सितं - வெளுத்தது
सुतं - ப்ரஸவிக்கப்பட்டது
सृतं - சென்றது
हतं - கொல்லப்பட்டது, பாழானது
हितं - இன்பந்தருவது, உகந்தது
हुतं - ஹோமம் செய்யப்பட்டது
हृतं - அபஹரிக்கப்பட்டது
कथं - (अ) எவ்விதம்?
इदं - இது
पदं - கால், பதவி, ஸ்தானம், சொல், அடையாளம், முயற்சி, காவல், காரணம், பொருள், யுத்தம், ச்லோகப் பகுதி, வேதப் பகுதி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ऋधं, मृधं - சண்டை
घनं - முகில், கனமானது, விஸ்தாரமானது, நெருங்கினது, உலக்கை, லோஹம்
दिनं - பகல், நாள்
धनं - பொருள்
वनं - காடு, தோட்டம், நீர், வீடு, இருப்பிடம்
निभं - பொய், போன்றது
शुभं - க்ஷேமம், மங்களம், நல்ல கார்யம்
समं - நிகர்த்தது, எல்லாம்
सिमं . எல்லாம்
सुमं - மலர்
हिमं - பனி
अयम् - இவன்
इयम् - இவள்
भयं - அச்சம்
अरं - சக்கர வடிவு, விரைவு
खरं - கோடை
खुरं - குளம்பு
चरं - அசைவது, ஜங்கமம்
चिरं - [अ] வெகுகாலம்
दरं - கொஞ்சம்
नरं - கல்பூரம், அஞானம்
परं - அன்னியம், உயர்ந்தது
परं -[अ]மட்டும்,மிகவும், மேலான
पुरं - ஊர், முப்புரம், சரீரம், வீடு
बरं - குங்குமம்
वरं -[अ] ச்லாக்யம்
शरं - ஜலம்
हरं - அபஹரிப்பது
अलं -[अ] போதும், அலங்காரம், தடை
कलं - ,, இனிமையாக, மெல்ல
कलं - பாத்திரம், விளங்காதது, அஜீர்ணம்
कुलं - வம்சம், கூட்டம், தேசம், கோத்ரம். வீடு, உடல்
खलं - ஓர் அளவு
खिलं - பழுதானது, மடு, அகழ், வெட்டாத ஏரி, தரிசு நிலம்
गलं - தொண்டை
गिलं - விழுங்குவது
गुलं - வெல்லம்
चलं - அசைவது
छलं - வஞ்சகம்
जलं - நீர், ஜடம், மந்தம்
तलं - பூமி, கீழ், கத்தியுறை, உருவம், காடு, பனைமரம், கத்திப்பிடி, உதடு
तिलं - எள்ளு
दलं - தளிர், துளிர்
पलं - பலம் என்ற அளவு, மாம்ஸம்
फलं- பழம்,பயன், பலகை, ஜாதிக்காய், ஆயுதத்தின் நுனி
बलंவலிமை, சேனை, தைர்யம், பருமன், கனம், ஸாமர்த்தியம்,
बिलं - குஹை, த்வாரம், வளை
मलं - விட்டை, அழுக்கு, பாபம்
शलं - முள்ளம் பன்றியின் முள்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

शिलं, सिलं - சிதறினது, சிந்தினது, பொறுக்குவது
हलं - கலப்பை
नवं - புதிது
शवं - இறந்த உடல், குடி தண்ணீர்
शिवं - ஸௌக்யம், க்ஷேமம், மங்களம், மோக்ஷம், ஜலம்
कुशं - நாணல், தர்ப்பம், தண்ணீர், குசத்தீவு
कृशं - மெலிந்தது, அல்பம்
भृशं - (अ) மிகவும், அதிசயம்
वशं - அதீனம்
विशं - சுக்கு
विषं - நஞ்சு, ஜலம்
विसं - தாமரைத்தண்டு, தாமரை நூல்
अहं - द நான்
गृहं - வீடு, மனைவி
पिकः - குயில்
बकः - கொக்கு, பகாஸுரன், கொக்கு மந்தாரை
यकः - யாதொருவன்
वुकः - மந்தாரை
वृकः செந்நாய், நரி, ஓநாய்
शकः - ஓர் முனி, சகாப்தம்
शुकः - கிளி, சுகப்ரஹ்மம், ராவணனுடைய ஒற்றன்
सकः - அவன்
सृकः - ஹவி சொரியும் பாத்ரம், அகப்பை, அல்லி, காற்று

विकिः - ஓர் பறவை
नकिः - (अ) தவிர
नखः - நகம்
मखः - யாகம், திருவிழா
लिखः - கணக்கன்
अगः - மலை, மரம், அசையாதது, ஆதவன், அரவு
खगः - பறவை, ஸூர்யன், அம்பு
नगः - மரம், மலை
भगः - பெண்குறி, ஸூர்யன், பெருமை, பறவை
मृगः - விலங்கு, மான், அறிவிலி, அம்புலிமான்
युगः - தேர்
सुगः - செல்லற்கெளிது
सृगः - பிண்டிபாலம் என்ற ஆயுதம், கல்லுளி
भृगुः - ப்ருகுமஹர்ஷி, சிவன், சுக்ரன், ஜமதக்னி, தடாகம்
लिगुः - மூர்க்கன்
अघः - அகாஸுரன்
निघः - கொடி படர்ந்த மரம்
मघः - மகநக்ஷத்ரம், உத்ஸவம், வேள்வி
रघुः - ரகு மஹாராஜன்
लघुः - லேசானது, அல்பன், நாகப்பூ
कचः - தலைமயிர்க்கற்றை, ஓர் ரிஷி குமாரன்
कुचः - ஸ்தனம்
पचः - சமையல்
वचः - स வாக்கு, சொல்
रुचिः - சுவை, சோபை, ஆசை, தழுவுதல், ஆதவன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

शुचिः - சுத்தமானவன், கோடை, நெருப்பு, வெளுப்பு, ஆடி மாதம், அமைச்சன், க்ரீஷ்ம ருது, ச்ருங்காரரஸம்

पिचुः - பஞ்சு, ஒரு வகைக் குட்டம், ஓர் அஸுரன்

अजः - பிரமன், ஆடு, பிறவியற்றவன், ஹரி, ஹரன், அஜ மகாராஜன், அறிவிலி, மன்மதன்

कुजः - அங்காரகன், மரம்

गजः - யானை

भुजः - கை, தோள்

रजः - स புழுதி, தூள், ரஜோ குணம், மாதரின் மாத விடாய்

ऋजुः - குணவான், நேரானது, ஒழுங்கானவன், பதவிசுள்ளவன்

यजुः स - யஜுர் வேதம்

कटः - பாய், இடுப்பு, கடுமை, யானைமத்தகம், பிணம்

किटः - பன்றி

कुटः - குடம், மரம்

खटः - குருடன், உளி, அந்தகூபம் என்னும் நரகம்

घटः - குடம், யானைத் தலை, ஸமாதி நிலை

नटः - நடிப்பவன், நடித்தல், பெருவகை யென்ற மரம்

पटः - வஸ்த்ரம், முதளஞ்செடி

पिटः - மூங்கில் கூடை, தாழுங் கூடை-பெட்டிகள்

भटः - ஸேனா வீரன்

वटः - ஆலமரம், ஜடை, குணம்

विटः - காமாதுரன், எலி, மலை

कटिः - இடுப்பு, இடை

किटिः - பன்றி

कुटिः - குடிசை, பர்ணசாலை

कटुः - கடுமை, கசப்பு, கைப்பு, துவர்ப்பு, கடுக்காய், ஞாழல், பகை, கொடுங் குரல், கெட்ட கார்யம்

चटुः - இனிய வாக்குள்ளவன், சமத்காரமாய்ப் பேசுபவன்

पटुः - ஸமர்த்தன், கிடை, உப்பு, புடலை, நோயற்றவன்

वटुः - ப்ரஹ்மசாரி, உபநீதன்

कठः - கடோபநிஷித்து

मठः - வீடு, மடம், பஜனை மடம், ஸன்யாசிகள் தங்குமிடம்

शठः - மூர்க்கன், பிடிவாதக்காரன், சண்டித்தனஞ்செய்பவன்

हठः - ஹடயோகம், பிடிவாதம், பலாத்காரம்

गुडः - யானைப்படை, கருப்பஞ்சாறு, வெல்லம், குதிரைப் படை, கரு

जडः - மூடன், புத்தி தெளிவில்லாதவன்

नडः - நீர்த்தாழ்ந்த பூமி, கோரை

मृडः - சிவன்

उडुः - நக்ஷத்ரம்

गडुः - கூனன்

दृढः - பலசாலி, உறுதியுள்ளவன், பருத்தவன்

कणः - அல்பம், உமி, தவிடு

किणः - காயமுள்ளவன், வெட்டுப் பட்டது

गणः - கூட்டம், சிவகணம், தேவ கணம், எண், படைவகை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

गुणः - குணம், ஸ்வபாவம், கயிறு, நூல், முக்குணம்
घणः - கோடரி
चणः - ஓர் தான்யம்
पणः - பந்தயம், அடகு வைத்த பொருள், சம்பளம், அளவு, நாணயம், சூது
रणः - சண்டை, சத்தம், மூலை
अणिः - அச்சு, ஓரம்
कुणिः - சொத்திக்கை, துன்னகம் என்னும் மரம்
घृणिः - ஸூர்யன்
फणिः - அரவு
मणिः - ரத்னம், ச்ரேஷ்டம்
सृणिः - அங்குசம், மார்க்கம், பகலவன், சந்த்ரன், வாயு
अणुः - சிறிது, வரகு எனும் தான்யம்
अतः - (अ) ஆகையால்
इतः - " இங்கிருந்து
कुतः - " எங்கிருந்து? எதனுல்?
कृतः - செய்யப்பட்டவன், க்ருத யுகம்
गतः - சென்றவன், மறைந்தவன், இறந்தவன்
जितः - ஜயிக்கப்பட்டவன்
ततः - நிறைந்தவன், பரந்தது
ततः - (अ) பிறகு, ஆகையால்
दितः - வெட்டப்பட்டவன்
धुतः - தள்ளப்பட்டவன்
धृतः - தாங்கப்பட்டவன், அணியப்பட்டடது
नतः - வணங்கினவன், வணங்கப்பட்டவன்
नुतः - துதிக்கப்பட்டவன்
भृतः - தாங்கப்பட்டவன்
मतः - ஸம்மதிக்கப்பட்டவன்
मितः - அளக்கப்பட்டவன், மிதமானவன்
मृतः - இறத்தவன், யமன்
यतः - முயற்சித்தவன்
यतः - (अ) யாதொரு காரணத்தால்
युतः - சேர்ந்தவன்
रतः - ரமித்தவன், ஆசைகொண்டவன்
वृतः - வரிக்கப்பட்டவன், சுற்றப்பட்டது
शितः - தீட்டப்பட்டது
सितः - வெளுத்தவன், கட்டப்பட்டவன்
सुतः - மகன், அரசன்
हतः - கொல்லப்பட்டவன்
हितः - வேண்டியவன், நன்மை செய்பவன்-நினைப்பவன்
हुतः - ஹோமஞ்செய்யப்பட்டது
हृतः - பறிக்கப்பட்டது
कृतिः - செயல், கவிதை
गतिः - போக்கு, துணை
चितिः - கபடம், பாடை
ततिः - பங்க்தி, வரிசை
दितिः - அஸுரர்கள்களின் தாய்
दृतिः - மேல்தோல், மீன்
धृतिः - தாங்குதல், தைர்யம், மகிழ்ச்சி, யாகம்
नतिः - வணக்கம், நமஸ்காரம்
नुतिः - ஸ்தோத்ரம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

पतिः - கணவன், தலைவன், காப்பவன், ஈசன்
भृतिः - சம்பளம்
मतिः - புத்தி, அறிவு
मृतिः - மரணம்
यतिः - ஸன்யாஸி, எதுகை, அளவுகோல்
रतिः - ரதி தேவி, ராகம், காதல், கூடல்
शितिः - ஏராளம், பூவரச மரம், வெண்மைநிறம், மச்சம்
स्रुतिः - வழி
हतिः - சேதம், கொலை
हृतिः - அபஹரித்தல், வழிப்பறி
ऋतुः - ருதுக்கள் ஆறு, தீரன், பஹிஷ்டை
चतुः - (अ) நான்கு முறை
पितुः - அக்னி, ரவி, குடிகாரன்
कुथः - யானைத் தோல், விரிப்பு, நாணல்
तिथः - அக்னி, காமன்
मिथः - (अ) ஒருவருக்கொருவர், ஒன்றுக்கொன்று, தனக்குள்
रथः - தேர், அவயவம், சரீரம் பாசி
हथः - தூக்கிப்பவன்
अदः - போஜனம்
अदः - स இது
गदः - நோய்
गुदः - மலத்வாரம்
छदः - இலை, சருகு
ददः - கொடுப்பவன்
नदः - மேலைக்கடல் சேரும் ஆறு
पदः - கிரணம்
मदः - யானை மதம், ஆணவம், கர்வம், மகிழ்ச்சி, மணம், கஸ்தூரி, ரேதஸ்ஸு
रदः - பல்
वदः - பேச்சாளன்
सदः - स ஸபை
छदिः - கூரை, கீற்று, மறைவு, குடை
भिदुः - வஜ்ரம்
मृदुः - மெல்லியது, கோமளமானது, சாந்தகுணசாலி
यदुः - யது மஹாராஜன், யது குலம்
विदुः - யானை மத்தகத்தின் மத்தி
अधः - (अ) கீழே
दधः - தரிப்பவன்
बुधः - புதன், வித்வான், புத்தர், புத்திசாலி, தேவன், கவி, கிழமை
वधः - கொலை
निधिः - நவநிதி, புதையல், இருப்பிடம்
विधिः - விதி, பிரமன், சாஸ்த்ர தர்மம், நியமம், காலம்
सधिः - காளைமாடு
गृधुः - மன்மதன்
मधुः - ஓர் அஸுரன், ஓர் மரம், சித்திரை மாதம், வஸந்தன்
विधुः - சந்த்ரன், விஷ்ணு, கற்பூரம், ஓர் அரக்கன்
अनः - स வண்டி
इनः - ஸூர்யன்
खनः - வெட்டுதல்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

घन: - மேகம், வாத்யம், கனமானது, விஸ்தாரம், உலக்கை, இருப்பு,உலோஹம்
जन: - மனிதன், உலகம், பிறப்பு
जिन: - புத்தர், ஜயசீலன், ஜினன்
पुन: - (अ) மறுபடி
मन: - स மனம், அறிவு, இஷ்டம்
सिन: - பொட்டை
खनि: - சுரங்கம்
जनि: - பிறவி
मुनि: - ரிஷி, புத்தர், வாயை அடக்கினவன்
शनि: - சனி பகவான், சனிக் கிழமை, சனி தசை
सनि: - குரு ஆராதனை
जनु: - स ஜன்மம்
तनु: - உடல், தோல்
दनु: - அஸுரர்களின் தந்தை
धनु: - स வில், மார்கழிமாதம், தனுர்லக்னம், ராசி, அம்பு, முதளஞ்செடி
मनु: - மனுச் சக்ரவர்த்தி, மந்த்ரம்
हनु: - கன்னம், ந்ருத்ய ஆரம்பம், பிரம்பு, நோய்
कृप: - க்ருபாசார்யன், பாரத பாத்ரம்
गुप: - ரக்ஷிப்பவன்
जप: - ஜபம், மந்தரம்
तप: - स தவம், தபோ லோகம், க்ரீஷ்மருது, முகில்
निप: - குடம், கள்ளுக்குடம்
नृप: - அரசன்
कपि: - குரங்கு
लिपि: - எழுத்து
तपु: - ஸூர்யன், அக்னி, சத்ரு
पपु: - ரக்ஷகன்
रिपु: - பகைவன்
वपु: - स சரீரம்
कफ: - கப நோய், கோழை, நாடி
शफ: - குளம்பு
पिब: - குடிப்பவன்
शिबि: - சிபிச்சக்ரவர்த்தி
इभ: - யானை
नभ: - स ஆகாசம்
निभ: - போன்றவன்
ऋभु: - தேவன்
विभु: - எங்கும் நிறைந்தவன், ஈசன், ப்ரபு
अम: - அமங்கள வடிவன், பாக்ய மற்றவன்
गम: - நடை
तम: - स இருள், தமோ குணம், ராகு, துயரம்
दम: - ஐம்புலனை யடக்குதல், சாதனை, அடி, சேறு, அடக்கம்
नम: - (अ) - வணக்கம்
यम: - யோகம், யமன், ப்ராண யாமம், வ்ருத்த லக்ஷணம், அடக்கம்
वम: - வாந்தி
शम: - சாந்தி, அடக்கம், சுருக்கம், ஆற்றல்
सम: - ஸமானமானவன், ஸர்வம்
सिम: - எல்லாம்
कृमि: - புழு, அரக்கு, கழுதை,
तिमि: - ஓர் மீன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

निमिः - ஓர் அரசன்
भृमिः - வாயு
चमुः - படை
अयः - அடைவு, கதி, விதி
अयः - स இரும்பு
चयः - கூட்டம்
नयः - வெற்றி, ஜய வர்ஷம்
नयः - நீதி, நல்ல வார்த்தை
पयः - स நீர், பால்
मयः - தெய்வத் தச்சன், மயாஸுரன், ஒட்டகம், யுதிட்டிரன்
रयः - வேகம்
लयः - லயித்தல், தாளம், தன்மயமாவது
वयः - स வயது, பக்ஷி, இளமை
शयः - கை
हयः - குதிரை, இந்த்ரன்
मयुः - மான், கின்னரன்
ययुः - - அச்வமேதக் குதிரை
शयुः - பெரிய பாம்பு, மலைப்பாம்பு
उरः - स மார்பு
करः - கை, கப்பம், துதிக்கை, கதிர்
किरः - பன்றி
खरः - கழுதை, கரனென்ற அரக்கன், கரவர்ஷம்
खुरः - குளம்பு
चरः - ஒற்றன், வேவுகாரன்
झरः - ப்ரவாஹம்
तरः - स வலிமை, வேகம்
तिरः - (अ) - குறுக்கே, மறைவில்
दरः - அகழி, பயம், குகை
धरः - மலை, ஆமையரசு

नरः - மனிதன், அர்ஜுனன், பிரமன்
परः - அன்னியன், சத்ரு, பெரியவன், அடுத்தவன்
पुरः - குங்கிலியம்
पुरः - (अ) - எதிரில்
भरः - சுமை, மிகவும்
मुरः - ஓர் அஸுரன்
वरः - கோரிக்கை, மணமகன், ச்ரேஷ்டன்
शरः - பாணம், பேய்க்கரும்பு
शिरः - स தலை, முக்கியம், சிகரம், நுனி
सरः - " குளம், ஜலம்
सुरः - தேவன்
हरः - சிவன், நெருப்பு, நாசவேலை செய்பவன்
अरिः - சத்ரு
किरिः - பன்றி
गिरिः - மலை, விழுங்குதல்
तरिः - ஓடம், சேணியர்தரி
शिरिः - விட்டில் பூச்சி, கொலையாளி
हरिः - விஷ்ணு, குதிரை, குரங்கு, இந்தரன், சந்த்ரன், யமன், வாயு, ஸூர்யன், கிரணம், சிங்கம், தவளை, கிளி, மஞ்சள் நிறம்
अरुः , புண்
उरुः - பெரிது
कुरुः - துர்யோதன் மூதாதை, குருவம்சம், பக்தன்
खरुः - மூர்க்கன், துஷ்டன், மன்மதன், குதிரை, ஆங்காரம்,

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

சிவன், அஸுரன், வெண்மை நிறம், காதலனை எதிர்பார்க்கும் கன்னி, குள்ளன்

गुरु: - ஆசான், பெரியவன், தந்தை, வியாழன், ப்ருஹஸ்பதி

चरु: - ஹவ்ய பாத்ரம்

तरु: - மரம்

परु: - சார், தயிர், முடிச்சு, வாஸனைப் பொடி, மூங்கில் கணு

परु: स ,,

पुरु: - ஓர் அரசன், அதிகம், ஸ்வர்கம், தூள்

भरु: - சிவன், யஜமானன், தங்கம்

मरु: - நிர்ஜலப்ரதேசம், பாலைவனம், மலை, வில்லாளி

रुरु: - ஓர் மான்

शरु: - சினம், பாணம், வஜ்ரம்

खल: - துஷ்டன், அல்பன்

गल: - கழுத்து

गिल: - விழுங்குபவன்

चल: - அசைவது

छल: - வஞ்சகன்

नल: - நளன், வானரத்தலைவன், நள வர்ஷம்

बल: - பலராமன், பலசாலி, பலிச்சக்ரவர்த்தி, அசுரன், காக்கை

मल: - லோபி

शल: - வண்டு, கூட்டம், விதி

अलि: - வண்டு, தேன், நண்டு வாக்கிளி, கள்

कलि: - கலியுகம், கலிபுருஷன், சண்டை, சூரன்

दुलि: - பெண் ஆமை, ஓர் முனி

बलि: - பலிச்சக்ரவர்த்தி, கை பலியிடுதல், பூதபலி

वलि: - கோடு, மடிப்பு

अलु: - கள்ளுக் கலயம்

अव: [अ] வெளியே

जव: - விரைவு, வேகம்

दव: - காட்டுத்தீ

धव: - பதி, மனிதன், மரம், விடன்

नव: - புதியவன்

पव: - தூற்றினது, மிகுத்தல்

भव: - சிவன், ஸம்ஸாரம், பிறவி, பவவர்ஷம், க்ஷேமம், அடைவு

यव: - சாமை, வரகு

युव: - யுவ வர்ஷம்

रव: - ஓசை

लव: - லேசம், ராமபுத்ரன், வெட்டுதல், அழகு, இறகு, பசுவின்வால்மயிர்

शव: - பிணம், அரக்கன்

शिव: சிவன், சிவயோகம், மறை, மதலை, குங்கிலியம், ஸுகம், க்ஷேமம், ஜலம், மோக்ஷம், மூளை, குச்சி, ஓரிதழ்த் தாமரை

सव: - உத்ஸவம், யாகம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

हवः - அழைப்பு, ஆக்ஞை, ஆஹுதி, யாகம்
अविः - யஜமானன், மலை, கொண்டல், ஆதவன், எலி, மயில், பூமி, ருதுவானபெண், மதில், வாயு
कविः - பாவலன், சுக்ரன், வான்மீகி, காவியம், பண்டிதன், பெண்
कृविः - சேணியன் கருவி
छविः - காந்தி, வெய்யில், அழகு
पविः - ஸூர்யன், வஜ்ராயுதம்
भुविः - கடல்
रविः - அர்க்கன்
हविः - स ஹோமத்ரவ்யம், நெய்
कुशः - ராமபுத்ரன், தருப்பை, குசத்தீவு
कृशः - இளைத்தவன்
दशः - பக்ஷி
यशः - स புகழ்
वशः - வசமாதல், வசம்பு, ஆசை, ஒளி
शशः - முயல்
पशुः - பசுமாடு, விலங்கு, உயிர்
शिशुः - சிறு குழந்தை, இளங்கன்று
इषः - ஐப்பசி மாதம்
उषः - [अ] } விடியற்காலம்
उषः - स }
कषः - சாணை
चषः - பால்தருவது
झषः - மீன்
तुषः - உமி, தானிமரம்
वृषः - காளை, ச்ரேஷ்டன், எலி, அறம், புண்யம், ஆடாதொடை
ऋषिः - ரிஷி, வேதம், வெய்யில்
मषिः - மை, கருப்பு, இருட்டு
इषुः - அம்பு
धृषुः - ஸமர்த்தன்
विषुः - வர்ஷப் பிறப்பு, புண்யகாலம்
हृषुः - ஆனந்தம், ஸூர்யன், அக்னி, சனி, ராகு
रसः - சுவை, ச்ருங்காரம் முதலிய நவரஸம், நஞ்சு, குணம், சிவப்பு, கண்ணுடிரஸம், த்ரவம்
हसः - சிரிப்பு
असिः - கத்தி
मिसिः - சதகுப்பை, சேம்பு
असुः - ப்ராணன்
वसुः - அஷ்ட வஸுக்கள், வஸுதேசம், தீ, கதிர், தனம், ரத்னம், அரசன், மருந்து, மதுரம், கொக்குமந்தாரை
अहः - न பகல், நாள்
गुहः - முருகன், குஹன் என்னும் வேடராஜன்
गृहः - வீடு. மனைவி
महः - स திருவிழா, மஹோலோகம், தேஜஸ்ஸு
रहः - ,, ரஹஸ்யம்
रुहः - முளைப்பது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

वहः - மாட்டுக் கழுத்து, சுமப்பவன், காற்று, கழுதை ஒட்டகம்

सहः - வலிமை

अहिः - பாம்பு, பகைவன், வ்ருத்ராசுரன்

बहिः - (अ) வெளியே

डहुः - எலுமிச்சை

बहुः - அதிகம்

मुहुः - (अ) அடிக்கடி

हुहुः - தெய்வலோகப்பாடகர்

———o———

(7) U

शुकी - பெண்கிளி

उखा - சமையல் பானை

शिखा - தலைமயிர், மரக் கிளை, மயிலின் தலையிலுள்ள கொண்டை, உச்சி, நுனி, நெருப்புஜ்வாலை

सखा - इ தோழன்

मखी - न யாகஞ்செய்பவன்

शिखी - " மயில், குடுமி யுள்ளவன், மரம், அக்னி, கோழி, அம்பு, கழுதை, கேது

सखी - தோழி

सुखी - न ஸுகவாழ்வுடையவன்

खगी - பெண்பறவை

भगी - न பகவான்

मृगी - பெண்மான்

भगो, अघो - (अ) விளிச்சொற்கள்

अघी - न பாவி

मघी - " இந்திரன், யாகஞ்செய்தவன்

वचा - வசம்பு

पचा - சமையல்

कची - न குடுமியுள்ளவன்

शची - இந்த்ராணி

अजा - பெண் ஆடு

कुजा - சீதை

मृजा - துடைப்பம்

रुजा - நோய்

अटा - அலைச்சல், குழப்பம்

घटा - யானைக்கூட்டம்

छटा, सटा - சிங்கப் பிடரிமயிர்

जटा - பின்னல், சடை, மரக்கிளை, விழுது

झटा - அருநெல்லி

कटी - இடுப்பு

कुटी - குடிசை

घटी - குடம்

घटी - न குடமெடுத்தவன்

जटी - " சடையன், சிவன், வானப்ரஸ்தன், இரளிமரம்

तटी - நதி, கரை, இடம்

नटी - நடிப்பவள்

पुटी - கயிறு

वटी - சிவஜடை, ஆலமரம், கயிறு

शटी - புரசமரம்

इडा - பசு, பூமி, வாக்கு

गुडा - விழுது, சதுரக் கள்ளி, ஸ்த்ரீ

नडा - அசட்டு மங்கை, பூனைக்காலியென்ற பச்சிலை

मृडा - பார்வதி

दृढा - கெட்டியானது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

कणा - ஜீரகம், திப்பிலி
घृणा - கருணை
फणा - பாம்புப்படம்
ऋणी - न கடனாளி
गुणी - " நற்குணவான்
फणी - " பாம்பு
कृता - செய்யப்பட்டவள்
गता - சென்றவள், மறைந்தவள்
चिता - பாடை
जिता - ஜெயிக்கப்பட்டவள்
तता - பரவினவள்
धृता - சுமக்கப்பட்டவள்
नता - வணங்கப்பட்டவள், வணக்கமுள்ளவள்
नुता துதிக்கப்பட்டவள்
पिता - ऋ தந்தை
भृता - தாங்கப்பட்டவள்
मता - ஸம்மதிக்கப்பட்டவள், வெகுமதிக்கப்பட்டவள்
मिता - அளக்கப்பட்டவள், மிதமானவள்
मृता - இறந்தவள்
यता - முயற்சிப்பவள்
युता - கூடியவள், சேர்ந்தவள்
रता - ரமிக்கப்பட்டவள், காதல்கொண்டவள்
हूता - அழைக்கப்பட்டவள்
लता - கொடி, ஞாழல், குருக்கத்தி, நாகப்பூ, வாலுரிவை
वृता - சுற்றப்பட்டவள், வரிக்கப்பட்டவள்
द्रिता - திட்டப்பட்டது
सिता - வெளுத்தவள், சர்க்கரை

सुता - மகள்
हता - கொல்லப்பட்டவள்
हिता - ஹிதமானவள்
हुता - ஹோமஞ்செய்யப்பட்டது, அக்னிக்கு இரையானவள்
हृता - அபகரிக்கப்பட்டவள்
कृती - न புண்யசாலி
सती - கற்புடையவள், நற்குணசாலி, உடன்கட்டையேறுபவள்
ऋते - (अ) இல்லாமல்
कृते - " பொருட்டு
कथा - கதை
तथा - (अ) எவ்விதம்
यथा - " எவ்விதமோ
पृथा - குந்தி
वृथा - (अ) வீண்
रथी - न தேராளி
अथो - (अ) பிறகு
कदा - " எப்பொழுது
यदा - " எப்பொழுதோ—
तदा - " அப்பொழுது
गदा - கதாயுதம்
तुदा - வேதனை
भिदा - பிளப்பு
विदा - ஞானம்
गदी - न கதாயுதமுள்ளவன், நோயாளி
नदी - ஆறு
रदी - न யானை, பல்லுள்ள(வன்) பல்லுள்ளது
पदेपदे - (अ) அடிக்கடி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

मुधा - " வீணே, பயனின்றி
युधा - சண்டை
विधा - வகை, சம்பளம், யானைத் தீனி
सुधा - அம்ருதம், சுண்ணாம்பு
विना - (अ) இல்லாமல்
सना - " சாச்வதம்
जनी - மருமகள், நாட்டுப்பெண், இண்டஞ்செடி
धनी - न தனவான்
धुनी - நதி
शुनी - பெண்நாய்
कृपा - அருள், தயை
जपा - அரளி
वपा - ஆஹுதி, மாம்ஸம், சுரங்கம், குகை
शिफा - தாய், ஆறு, ஜடை
कफी - न கபரோகி
निभा - நிகரானவள்
विभा - பகல்
शुभा - நன்மைசெய்வது
सभा - ஸதஸ்ஸு, ஸபை
उभे - अ, आ இரண்டு வஸ்து, இருபெண்டிர்
उभौ - अ இரண்டு ஆண்
अमा - அமங்களம், மூதேவி
अमा - (अ) அமாவாஸ்யை
उमा - பார்வதி, மஞ்சள், சோபை, புகழ், கறுநெய்தல்
रमा - லக்ஷ்மி
रुमा - ஸுக்ரீவன் மனைவி
समा - ஸமமானவள், எல்லா

सिमा - எல்லோரும்
तमी - இருள், இருண்ட இரவு
दमी - न தன்அடக்கமுள்ளவன்
यमी - " ஸன்யாஸி
वमी - " வாந்தி நோயாளி
शमी - " ஐம்புலனை வென்றவன், யோகி
शमी - ई வன்னிமரம்
गया - கயை என்ற க்ஷேத்ரம்
जया - தழுதாழை, ஓர் விசேஷ திதி, உமை, பந்தயம், முன்னைச்செடி, உமையின்சேடி
दया - இரக்கம்
धया - கன்னிப்பெண்
जयी - न வெற்றி கண்டவன்
रयी - " வேகசாலி
हयी - " குதிரையுள்ளவன்
अये - (अ) விளி, அடி!, அடேய்!
इरा - கள், ஜலம், பூமி
खरा - தேவதாளி
चरा - அசைவது, ஜங்கமம்
जरा - நரை, மூப்பு, ஓர் பேய்
धरा - பூமி
धुरा - சுமை
परा - உயர்ந்தவள், பிறத்தி, வாக்குகள் நான்கிலொன்று
पुरा - (अ) முன்நாள்
मरा - மராமரம்
मुरा - முறம் என்னும் கந்தத்ரவ்யம்
वरा - ச்லாக்யமானவள்
शिरा, सिरा - நாடி, நரம்பு

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

सुरा - தேன், கள், அமுதம்
करी - யானை
खरी - தேவதாளி
गरी - தண்ணீர்முட்டான்
झरी - நதி
तुरी - ஓடம்
दरी - மலைக்குகை
पुरी - ஊர்
अरे - (अ) விளி, அடபயலே!
इला - பூமி
कला - அறுபத்து நான்கு கலை, சந்த்ர கலை, அழகு, ஓர் அளவு
खला - அல்பத்தனம்உள்ளவள், துஷ்டை
चला - அசைபவள்
तुला - திராசு, ஐப்பசிமாதம்
बला - வல்லாரை, சித்தாமுட்டி, ஓர் மந்த்ரம்
शिला - கல், வாசற்படிமரம்
हला - (अ) இழி விளி; அடீ!
कुली - சிறுவழுதல்
कुली - न உயர்குடிப் பிறந்தோன்
फली - " காய்த்துப் பழுக்கும் மரம்,பயனுள்ளது,ஜாதகம்
बली - " பலசாலி, பலிச் சக்ரவர்த்தி
शली - " முள்ளம்பன்றி
शिली - " நீர் வாழும் சிறுவண்டு, அம்பு
हली - " பலராமன், கலப்பை யெடுத்தவன்

जवा - செம்பரத்தை
दिवा - (अ) பகல்
नवा - புதியவள்
भवा - ஜனித்தவள், பார்வதி
युवा - न காளைப் பருவத்தினன், உத்தமன், பலசாலி
शिवा - பார்வதி, பெண்நரி, தும்பை, வன்னிமரம், அருநெல்லி, கடுக்காய் மரம்
जवी - न வேகசாலி, குதிரை
कशा - குதிரைக்குட்டி, சவுக்கு, சாட்டை
कृशा - மெலிந்தவள்
दशा - க்ரஹ நிலை, ஆடைத் தலைப்பு, வாலிபம் முதலிய பருவம், நல்லகாலம், பூமி பெண்
दिशा - திசை
निशा - இரவு
वशा - பெண்யானை, பெண் குதிரை
कुशी - இரும்பு உருக்கு
कृशी - இளைத்தவள்
वशी - न ஸ்வதந்த்ரன்
शशी - ,, சந்த்ரன்
उषा - பாணாஸுரன் பெண், அநிருத்தன் பார்யை
उषा - (अ) விடியற்காலம்
झषा - பெண்மீன், சுக்கு, திப்பிலி, பீர்க்கு
तृषा - நீர் வேட்கை
मृषा - (अ) பொய்
रुषा - சினம்
धिषणा - புத்தி, அதிவிடயம்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

वृषा - न இந்த்ரன், கர்ணன், வ்ருஷபம், குதிரை, எலிவால்
मषी - மை, கறுப்பு
वृषी - தர்பாஸனம், ஜபாஸனம்
रसा - பூமி, பங்கெப்பாலை
वसा - கொழுப்பு
बृसी - மஹர்ஷிகளின் ஆஸனம்
असौ - स - இவன், இவள்
गुहा - குகை, பெருமல்லி
रुहा - தூர்வா, அறுகம் புல், முளைப்பது, செடி
विहा - (अ) ஸ்வர்கம், வான்
सहा - தாழை, சிறுகுறிஞ்சி, நரிப் பயறு, பூமி
गृही - न வீட்டிற்குடையவன், கிருஹஸ்தன்
मही - பூமி
अहो - (अ) அச்சோ !

——o——

8 IU ∸

मनाक् - (अ) அல்பம்
अभाक् - ज பங்கில்லாதவன், அடையாதவன்
पराक् - (अ) உதாஸீனம், கவனியாதிருத்தல்
अवाक् - ” கீழ்நோக்குதல், குனிதல்
अवाक् - च ஊமை, பேசாதவன்
विपाट् - श விபாசை யென்ற ஆறு
विराट् - ज அரசன், கருடன், விராட்புருஷன்
सुराट् - ” நல்ல அரசன், இந்த்ரன்

सनात् - (अ) சாச்வதம்
चिरात् - ” நெடுநாள்
पुमान् - स புருஷன்
इयान् - त இத்தனை
कियान् - ” எத்தனை ?
भवान् - ” தாங்கள், நீங்கள், பூஜிக்கத்தக்கவன்
महान् - ” பெரியவன்
चिकी: - स வேலை செய்ய ஆசையுள்ளவன்
सुखी: - ” ஸுகம் விரும்புபவன்
अड्डू: - ஓடம்
सुतीं: - மகவு வேண்டுவோன்
कृतू: - எண்ணெய்—நெய்ப் பாத்திரம்
सुधी: - நற்புத்தியுள்ளவன், வித்வான்
वधू: - நாட்டுப்பெண், புதுமணப் பெண், ஸ்த்ரீ, மனைவி, நாகப்பூ
श्रृधू: - மலத்வாரம், அபானம்
तनू: - உடல்
धनू: - வில், ஓர் சஸ்த்ரம்
पपी: - ஸூர்யன், சந்த்ரன்
सुपी: - स தேவன்
नभा: - வானம், வில்லாளி, ஆவணி மாதம், முகில், மூக்கு, வர்ஷருது, தாமரை நூல், தம்பலப்படிகம்
अभी: - அஞ்சாதவன்
समा: - ஆண்டு
चमू: - ஸைன்யம், ஸேனா விசேஷம்
ययी: - குதிரை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

तरी: - தோணி
जहू: - யக்ஞ பாத்ரம்
हहा: - தெய்வலோகப் பாடகர்

—o—

9 UI

साचि - (अ) கொஞ்சம்,குறுக்கே
चाटु - இனிது, சமத்காரம்
जातु - (अ) ஒரு ஸமயம்
आदि - ஆரம்பம், முதல்
भेदि - न பிளப்பது
वादि - " சப்திப்பது
वेधि - " துளைப்பது
शीधु - கள்
साधु - நல்லது
साधु - (अ)நன்று, ஒத்துக்கொள்வது
जानु - முழங்கால்
सानु - தாழ்வரை, சிறுகுன்று
दाम - न வரிகயிறு, மாலை, தும்பு
धाम - " வீடு, சோபை
नाम - " பெயர்
नाम - (अ) என்னலாம், போலும்
भूम - न மிகுந்தது
रोम - " மயிர்
लक्ष्म - " வால்
लोम - " மயிர், வால்
साम - " ஸாமவேதம், ஸாமோபாயம், சாந்தவசனம்
हेम - ,, தங்கம்
सामि - (अ) ஸ்வல்பம்
भूरि - மிகவும், தக்ஷிணை
वारि - ஜலம்

चारु - அழகானது
दारु - காய்ந்த கட்டை, விறகு, தேவதாருமரம்
तालु - கன்னம்
एव - (अ) தான், நிச்சயம்
भावि - न எதிர்காலம், ஸம்பவிப்பது
आशु - (अ) சீக்கிரம்

—o—

10 UI

ईदृक् - श இத்தகையது?
तादृक् - " அவ்விதமானது
मादृक् - " என்போன்றவன்
गोरट् - ष மாடு மேய்ப்பவன்
गोविट् - श பகவான், பசுவின் சாணம்
एतत् - द இது
आपत् - " அபாயம்
कूपत् - (अ) கேழ்வி, ச்லாக்யம்
भूभृत् - அரசன், மலை
वीरुत् - ध படர்கொடி
तावत् - அத்தனை
यावत् - எத்தனையோ—
नीवृत् - தேசம்
ईषत् - (अ) கொஞ்சம்
योषित् - ஸ்த்ரீ
रोहित् - மான்பேடு, ஆதவன்
याचन् - त இரப்பவன்
रोचन् - " விரும்புபவன்,
शोचन् - " துக்கிப்பவன்
कूजन् - " சப்திப்பது
याजन् - " யாகஞ்செய்பவன்
राजन् - " ப்ரகாசிப்பவன்

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

वीजन् - ” விசிறுபவன்
खादन् - ” உண்பவன்
खेदन् - ” வருந்துபவன்
मोदन् - ” மகிழ்பவன்
रोदन् - ” அழுபவன்
सीदन् - ” அமர்ந்திருப்பவன்
योधन् - ” அமர் செய்பவன்
जानन् - ” அறிபவன்
शोभन् - ” சோபிப்பவன்
आयन् - ” வருபவன்
गायन् - ” பாடுபவன்
खेलन् - ” விளையாடுபவன்
जीवन् - ” உயிர் வாழ்பவன்
धावन् - ” ஓடுபவன்
एकम् - ஒன்று, தனி, முக்யம்
काकम् - காக்கைக்கூட்டம், ஸூர தாந்தம்
तोकम् - சிசு
बाकं - கொக்குக்கூட்டம்
भूकम् - பூமிப் பிளப்பு, புற்று, த்வாரம், காயம்
रोकम् - குகை, கலக்கம், அசை வது, கிரணம்
शौकं - கிளிக்கூட்டம், ஸ்த்ரீகார் யம்
साकं - (अ) உடன், கூட
नागं - சிவப்பு, துத்தநாகம், நாடக சாலை
मोघं - பயனற்றது, நார்
चोचं - இலை, தோல், பனம்பழம், வாழைப்பழம், கிராம்பு
शौचं - சுத்தம்
नैजं - ஸ்வந்தம், தன்னுடையது

बीजं - விதை, ரேதஸ்ஸு, கார ணம், உண்மை, விருஷணம்
भूजं - பூமியிலிருந்துண்டானது
कूटं - மலையுச்சி, தான்யராசி, கோட்டைவாயில், கண்ணி, யந்திரம், கபடம், மாயை, டம்பம், கலப்பைநுனி, பொய், அல்பம், அசையா தது, இரும்புக்கட்டி
पीठं - ஆஸனம்
चौडम् - குடுமியில் - தலையுச்சியில் வைக்கக்கூடியது
नीडम् - பறவைக்கூடு, இடம்
गाढम् - கவிந்தது
गाढम् - (अ) மிகவும்
गूढम् - மறைந்தது, ரஹஸ்யம்
वाढम् - (अ) மிகவும், சரி
मूढम् - மறைந்தது, மோஹங் கொண்டது, மயங்கினது, அறிவிழந்தது
रूढम् - முளைத்தது, படர்ந்தது
ऐणं - மானுடையது
गौणं - பெருமையுள்ளது, குணத் தைப் பொறுத்தது
रीणं - ஒழுகினது
शोणं - சிவந்தது, சிவப்பு நிறம், செவ்வல்லி
ऊतं - நெய்யப்பட்டது, நெசவு
एतं, ऐतं - பல நிறம்
खातं - தடாகம், புஷ்கரணி
गीतं - பாட்டு
घातं - கொலை
चूतं - மாங்காய், மாங்கனி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

जातं - வெளிப்படை, கூட்டம், பிறவி, பிறந்தது

दातं - வெட்டப்பட்டது, அறுக்கப்பட்டது, சுத்தம்

धूतं - தூற்றப்பட்டது, விரட்டப்பட்டது

धौतं - சுத்தமானது, வெளுத்தது

नीतं - கொண்டு செல்லப்பட்டது

पीतं - மஞ்சள், மஞ்சள் நிறம், குடிக்கப்பட்டது, வெள்ளை, குடி

पूतं - பாவனமானது

भीतं - அஞ்சினது, பயம்

भूतं - ஸம்பவித்தது, தகுதி, கடந்தது, உண்மை, பொருள், விதி, ஐம்பூதம்முதலியவை, பிசாசு முதலியவை, ஐந்து

मूतं - கட்டப்பட்டது

यातं - சென்றது, நடை

वीतं - சக்தியற்றயானைப்படை - குதிரைப்படை, விடுபட்டது

शातं - தீட்டப்பட்டது, கூர்மையானது, ஆனந்தம்

शीतं - குளிர், பாசி

सूतं - ப்ரஸவமானது, அனுப்பப்பட்டது, தூண்டப்பட்டது

गूथं - மலம்

पीथं - நெய்

यूथं - விலங்குக் கூட்டம், மாது, ஓர் மலர்

ऊनं - குறைந்தது, அல்பம்

गानं - இசை

दानं - கொடை, தானோபாயம், யானைமதம், த்யாகம், அறுத்தல், காத்தல், சுத்தி

नूनं - (अ) அனேகமாய், நிச்சயம்

पानं - குடி, குடித்தல், நீர்

पीनं - பெரிது

मानं - அளவு

मौनं - பேசாதிருத்தல், முனிவர் தன்மை, மௌன விரதம்

यानं - வாஹனம், செல்லல், ராஜதந்த்ரம்

लीनं - லயித்தது

लूनं - அறுந்தது

वानं - உலர்ந்த கனி, சருகு, காற்று, பாய், சிற்றலை, சுரங்கம்

शीनं - நெய்

सूनं - மலர்

हीनं - இல்லாதது

पापं - பாவம்

पूपं - அப்பம்

रूपं - அழகு, வடிவம், ஸ்பாவம், ஓர் நாடகம், பசு, சுலோகம், வான்ஒலி, ஓர் நாணயம்

सूपं - துவரை, பருப்பு

आमं - ஒரு வகை ச்ராத்தம், கெட்டது

ऊमं - நகரம்

कामं - (अ) மிகவும், உசிதம்

भीमं - பயங்கரமானது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

रामं - அழகானது, பெருவியாதி
लूमं - வால்
वामं - இடது பாகம், விரோதம், வக்ரம், பொருள், எதிர்த்தல், மிக அழகானது
सोमं - ஜலம், ஸோமயாக ஹவிஸ்ஸு
हैमं - தங்கம், தங்கமயமானது
कायं - ப்ரஹ்ம தைவதம், விரல் நுனி தீர்த்தம்
खेयं - வெட்டத் தக்க குளம்
गेयं - பாடத்தக்கது
चेयं - பறிக்கத்தக்கது
जेयं - ஜயிக்கத்தக்கது
तोयं - நீர்
देयं - கொடுக்கத்தக்கது
धेयं - தாங்கத்தக்கது, நினைக்கத் தக்கது
नेयं - கொண்டு செல்லத்தக்கது
पेयं - குடிக்கத்தக்கது
मेयं - அளக்கத்தக்கது
सायं - (अ) மாலை நேரம்
हेयं - நிந்திக்கத்தக்கது, அல்பமானது
गौरं - வெளுத்தது, வெண்கடுகு, தாமரையரும்பு
घोरं - பயங்கரமானது
चीरं - மரவுரி
चोरं, चौरं - திருட்டு
तारं - வெள்ளி
तारं - (अ) கூக்குரல்
तीरं - கரை
दूरं - (अ) எட்ட
घीरं - குங்குமம்
नारं - ஞானம், தண்ணீர்
नीरं - நீர்
पौरं - ஊரிலுள்ளது, காவட்டம் புல்
वारं - கட்குடம்
वारं - (अ) முறை
वैरं - பகை
सारं - நீர், பொருள், சார், ச்லாக்யம்
सीरं - கலப்பை
आलं - பெரிது, ஹரிதாரம் (பவுடர்)
कालं - கறுத்தது
कूलं - கரை
कोलं - இலந்தைப்பழம்
गोलं - உருண்டை, பூமி
चेलं - வஸ்த்ரம்
चौलं - குடுமிவைத்தல், ஓர் ஸம்ஸ்காரம்
जालं - பொய், ஜன்னல், வலை, நீலித்தனம், கபடம், கூட்டம்
तालं - கத்திப்பிடி, வில்
तूलं - பஞ்சு, பூவரசு
तैलं - எண்ணெய்
नालं - தாமரைதண்டு, வைக்கோல்
नीलं - கறுப்பு, ஓர் ரத்னம், கறு நெய்தல் பூ

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

पालं - ஸ்தானம்
फालं - நெற்றி, பஞ்சு, ஆடை
मूलं - காரணம், வேர், முதல், அருகு, மூல நக்ஷத்ரம்
लोलं - அசைவது
वालं - குருவேறு, வார், வால்
शालं - இடம், விளங்குவது
शीलं - நற்குணம், ஸ்வபாவம்
शूलं - சூலாயுதம், சூலை நோய், வாரசூலை, எமன் கொடி
हालं - நஞ்சு
एवं - (अ) இவ்வாறு
देवं - இந்த்ரியம்
दैवं - தெய்வம், தெய்வச் செயல், அத்ருஷ்டம், கடவுள் தந்தது
भावं - ஸம்பவிப்பது
शेवं - மேட்ரம், ஸுகம்
शैवं - சிவனுடையது, சைவ மதம்
ऐशं - ஈசனுடையது
काशं - நாணல்
नैशं - இரவிலுள்ளது
जोषं - (अ) ஸுகம், மௌனம், துதித்தல், தாவுதல், மெல்ல
पोषं, पौषं - திருவிழா, போர்
माषं - உளுந்து
यूषं - கபம், கோழை
सीसं - ஈயம்
गेहं - வீடு
देहं - உடல்
लोहं - இரும்பு

एकः - ஒருவன், தனி, முக்யமானவன்
ओकः - வீடு, ஆதாரம்
काकः - காக்கை, ஓர் தீவு
कोकः - நரி, செந்நாய், தவளை, சக்ரம், சக்ரவாகப்புள்
छेकः - வீட்டில் வளர்க்கும் பக்ஷி ம்ருகங்கள்
दाकः - வள்ளல்
धाकः - காளைமாடு, ஆதாரம்
धूकः - வாயு
नाकः - ஸ்வர்கம், வானம்
नीकः - ஓர் மரம்
पाकः - சமையல், பருவம், குழந்தை, நரை
भेकः - தவளை, முகில்
मूकः - ஊமை, ஓர் முனிவர், ஓர் அஸுரன், நொந்தவன்
मोकः - பாம்புச் சட்டை
रोकः - குகை, கலக்கம், அசைவது, கதிர்
लोकः - ஜனம், உலகம்
वीकः - வாயு, பறவை
शाकः - கீரை, சாகத் தீவு, பத்ர புஷ்பாதிகள், வலிமை, ஓர் மரம்
शूकः - அனுதாபம், கூர்மையானது, ஓர் தான்யம்
शोकः - துக்கம்
सेकः - பாய்ச்சுதல், தெளித்தல்
माकिः - (अ) தவிர
काकुः - குரல் வகை, தாழ்ந்த குரல், ஸ்வபாவ விரோதமாய் பேசுவது

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

नाकुः - புற்று, மலை, ஓர் முனி
लेखः - தேவன், எழுத்து
आखुः - எலி
आगः - ஸ குற்றம், பயம்
छागः - செம்மறியாடு
नागः - பாம்பு, யானை, மலை, நாக மரம், மேகம், யானைத் தந்தம், நாகமென்ற உடல் வாயு, உயர்ந்தவன்
पूगः - கூட்டம், கமுகு, பூவரசு
भागः - பாக்யம், பங்கு, பாதி
भोगः - போக்ய வஸ்து, பாம்பின் உடல், ஸுகானுபவம், ஸுரதம்
यागः - யக்ஞம்
योगः - யோகம், சேர்க்கை, அம்ருதாதி யோகம், யோக சாஸ்த்ரம், யோகாப்யாஸம், யோகஸித்தி, உபாயம், யுத்தம், த்யானம், யுக்தி, மருந்து, கூட்டம், அஷ்டாங்க யோகம், நம்பிக்கை த்ரோஹம்
रागः - ஆசை, சிவப்பு, ராகம்
रोगः - நோய்
वेगः - விரைவு, ப்ரதாபம், ரேதஸ்ஸு
ओघः - கூட்டம், ஜலவேகம், பரம்பரை, வேகநடம், உபதேசம்
माघः - மாசிமாதம், மாககவி, மாககாவியம்
मेघः - முகில், பெருமுத்தக்காசு
मोघः - பயனற்றது, சாவி, நூல்
काचः - காசு, ஓர் நோய், உரி, ஒருவகை மண், கண்நோய்

चोचः - லவங்கச்செடி, கிராம்புச் செடி
नीचः - அல்பன், கீழ்க்குலத்தோன்
सूचः - இளந்தர்பம்
रोचिः - ஸ சோபை, கிரணம்
वीचिः - அலை, அவகாசம், ஸுகம்
शोचिः - ஸ ப்ரகாசம், கதிர்
सूचिः - ஊசி
ओजः - ஸ சோபை, வீர்யம்
तेजः - ” சோபை, சுக்லம், வலிமை, உண்மை
भूजः - மரம், அங்காரகன்
भोजः - போஜராஜன்
लाजः - மந்த்ராக்ஷதை, பொரி, நனைந்த நெல்
वाजः - இறகு, வேகம், ஓசை
आजिः - போர், ஸமபூமி
याजिः - யாகஞ்செய்பவன்
राजिः - வரிசை, கோடு
कीटः - புழு
खेटः - கபம், க்ராமம், தோல், அற்பம்
आटिः - தருவு என்ற பறவை
कोटिः - நுனி, வில்நுனி, தனுஷ்கோடி, கோடி என்ற எண், உயர்ந்தது
चाटुः - இன்சொல், ரஸமான பேச்சு
कोठः - ஓர்வகைக் குட்டம்
पाठः - படிப்பு, பாடம்
एडः - செவிடு
खोडः - நொண்டி

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

आडि: - आटि:
गाढ: - ஆழ்ந்தவன்
गूढ: - மறைந்தவன், ஒளிந்தவன்
मूढ: - முட்டாள், மோஹங் கொண்டவன்
रीढ: - அவமானம்
रूढ: - முளைத்தது
रूढि: - மனிதனுல் கற்பிக்கப் பட்டது
एण: - மான்
कोण: - மூலை, நாதம், ஓர்வாத்யம்
घोण: - மூக்கு
तूण: - அம்பறுத்தூணி
बाण: - அம்பு, பாணஸுரன், கோஸ்தனம், பாணலிங்கம்
भाण: - ஓர் கவி
रीण: - ஒழுகினது
शाण: - சாணை, நான்கு மாதம்
शोण: - நெருப்பு, ஓராறு
हूण: - மிலேச்சன், ஓர் தேசம்
पाणि: - கை
वेणि: - ஒற்றைச்சடை
रेणु: - பொடி, தூள்
वेणु: - மூங்கில், குழல்
आत: - (अ) இங்கிருந்து, இதனிலும்
एत: - வந்தவன், பல நிறம், கலங்கினது, உள்வடிவம், ஸ்வரூபம், நாசம், மிச்சம், ஸமீபம்
खात: - வெட்டப்பட்டவன்
गीत: - பாடப்பட்டவன்
घात: - கொல்லப்பட்டவன்
चूत: - மாமரம்
चेत: - स ஹ்ருதயம்
जात: - பிறந்தவன், மகன்
तात: - தந்தை, செல்லப்பிள்ளை, பெரியோன், இரங்கத்தக்கவன்
दात: - சுத்தன்
दूत: - ஏவலன், தூதன்
धूत: - தூற்றப்பட்டவன், உலுக்கப்பட்டவன்
नीत: - கொண்டு செல்லப்பட்டவன்
पात: - வீழ்ச்சி
पीत: - மஞ்சள்நிறம், குடிக்கப்பட்டவன்
पूत: - பரிசுத்தமானவன்
पोत: - குழந்தை, வாஹனம், ஓடம், உடை, இருப்பிடம்
भीत: - அஞ்சினவன்
भूत: - ஜனித்தவன், ஐம்பூதம், சிவகணம், தகுதி, உண்மை, மகன்
यात: - சென்றவன்
रेत: - स சுக்லம், நாதம், பிந்து
लोत: - கண்ணீர், அடையாளம்
वात: - வாயு, காற்று, வாதநோய், தாது
वीत: - விடுபட்டவன்
शात: - தீக்ஷ்ணம், அழகானது
शीत: - குளிர்ந்தது, சந்திரன், வஞ்சிப்பாசி, நறுவிலி
सूत: - தேர்ப்பாகன், ஸூதபுராணிகர், தச்சன், க்ஷத்ரிய ப்ராஹ்மணீபுத்ரன்
हूत: - அழைக்கப்பட்டவன்
आति: - பறவை

Funding by IKS-MoE

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh.

ईतिः - பெரும் மழை புயல் முத லிய உபாதி

गीतिः - பாட்டு, புகழ்

जातिः - ஸ்வபாவம், ஜாதியென்ற அலங்காரம், வகுப்பு, பிறப்பு, கூட்டம், குலம், கோத்ரம், ஜாதிமல்லிகை, ஜாதிக் காய், நெல்லி, நாரத்தை, செவிலித்தாய், அடுப்பு

नीतिः - ந்யாயம், மனுநீதி, சுக்ர நீதி

पूतिः - துர்கந்தம், ஹோமப்புகை யின் நறுமணம்

भीतिः - அச்சம்

भूतिः - ஐச்வர்யம், திருநீறு, யானை, ச்ருங்காரம், பிறப்பு, உத்ஸாகம், மாம்ஸ பாக விசேஷம்

रीतिः - ப்ரகாரம், ஒழுக்கு, தன்மை, விதம்

वातिः - வாயு

सातिः - கொடை, முடிவு

